**தலைப்பு - 264- மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013**

---

## 1.1 மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கான கணனி வலையமைப்பை வழங்கலும் உள்ளக மற்றும் வெளிவாரி வலையமைப்புக்களை அறிமுகப்படுத்தலும்

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களுடைய நிலையில் தங்கியிருப்போரிக்காக இடைக்கால பயிற்சியளித்தல்

(இ) யாழ்ப்பாண மாவட்டத்தின் அறிமுகப்படுத்தும் அபிவிருத்தி செயற்திட்டங்களை திடமிடவும் அமுலாக்குவதற்கும் மற்றும் நிதி ஏற்பாடு வழங்கவும்.

(ஈ) வறுமைகோட்டிற்கு கீழே வருகின்ற ஏழை மக்களிற்கு கல்வி, சுகாதார வசதிகள் வழங்கலும் அவர்களுடைய கல்வி தரத்தை உயர்த்துவதற்கு உதவி வழங்கல் அல்லது வாழ்வாதார உதவி வழங்கல்.

(உ) தாமதம் இல்லாமல் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு பதிவு போன்றன கிராமம், பிரதேசம் மற்றும் மாவட்ட மட்டங்களில் சிறந்த பொது பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதை உறுதிப்படுத்தல்.

(ஊ) இடர் முகாமைத்துவ சேவைப் பிரிவு முலம் கிராமிய மட்டத்தில் குழுக்களை நியமித்தலும் அந்த இடத்தில் உடனடி நிவாரண உதவிகளை வழங்கலும்.

(எ) உரிய காலத்தில் நடாத்தப்படுகின்ற காலாச்சார விழாக்கள் மூலம் மரபு ரீதியான காலச்சார பெறுமதிகள் அல்லது அசைவுகளின் பராமரிப்பு அல்லது பாதுகாப்பு

(ஏ) தேர்தல் ஒருங்கிணைப்பு.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) நெடுந்தீவு
(ஆ) வேலனை
(இ) காரைநகர்
(ஈ) ஊர்காவற்றுறை
(உ) யாழ்ப்பாணம்

(ஊ) நல்லூர்

(எ) வலிகாமம் தென் மேற்கு

(எ) வலிகாமம் மேற்கு

(ஐ) வலிகாமம் தெற்கு

(ஒ) வலிகாமம் வடக்கு

(ஓ) வலிகாமம் கிழக்கு

(ஔ) வடமராட்சி தென் மேற்கு

(க) தென்மராட்சி

(கா) வடமராட்சி வடக்கு

(கி) வடமராட்சி கிழக்கு

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய வருமானக் கணக்குகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 10 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்களையும் 1.6 இலிருந்து 1.15 வரையான பந்திகளில் காணப்படுகின்ற ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

(அ) கணக்குகளின் சமர்ப்பிப்பு

மாவட்ட செயலகம் 2014 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்காக வருமான கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏடுகள், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணாமை

(i) மாவட்ட செயலகம் பின்வரும் ஏடுகளைப் பேணியிருக்காத பேணப்பட்டிருக்கவில்லை அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. என்பது கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| **பதிவேட்டின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|
| ஓய்வூதியம்- மிகையறவீட்டுப் பதிவேடு | கச்சேரி கைநூல் 4:4(II) |
| ஓய்வூதியம்- ஓய்வூதியத்தின் வித்தியாசமான வகை | கச்சேரி கைநூல் 4:2(I) |
| அடியிதழ் புத்தகத்தின் பதிவேடு | கச்சேரி கைநூல் 5:10 |
| கட்லொக் புத்தகம் | கச்சேரி கைநூல் 5:9 |
| தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 846(3), 845(1) |
| குறைநிரப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 533 |
| வைலட் இருப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 533 |
| செலுத்தப்படாத கூலிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 290(1) |
| நட்டங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| காசோலைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 533 |
| வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை | நிதிப்பிரமாணம் 1646, 1647 |

(ii) ரூபா 11,003,201 மொத்தமான மாவட்ட செயலகத்தின் இருநூற்றி இருபத்தியெட்டு கொடுக்கல் வாங்கல்கள் வேலை பூர்த்தியாக்கல் அறிக்கை, கேள்விகள், கொள்வனவு குறிப்பு, விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு, பொருளிருப்பு பதிவேட்டுச் சான்றிதழ், மேலதிக எரிபொருளிற்கான அங்கீகாரம், அனுமதிக் கடிதம் போன்ற அத்தகைய சான்றுகள் கிடைக்காமை காரணமாக திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

## (இ) ஒதுக்கீட்டுக் கணக்கு

### (i) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மாவட்ட செயலகத்தின் மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 608,793,833 தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 608,134,414 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, மொத்த தேறிய ஏற்பாட்டின் தேறிய சேமிப்புக்கள் ரூபா 659,419 அல்லது 0.001 சதவீதமாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

**2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவருபவை | 563,943,833 | 563,517,243 | 426,590 | 0.0007 |
| மூலதனம் | 44,850,000 | 44,617,171 | 232,829 | 0.01 |
| மொத்தம் | **608,793,833** | **608,134,414** | **659,419** | |

### (ii) பாதீட்டு முரண்

(அ) எட்டு செலவின விடயங்களின் கீழ் செய்யப்பட்ட ரூபா 10,113,701 தொகையான முழு தேறிய ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பத்து செலவின விடயங்ககளிற்காக மிகை ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அத்தகையவாறு பயன்பாட்டின் பின்னரான சேமிப்புகள் 5.1 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் இருந்தது.

(இ) பத்து செலவின விடயங்ககளிற்கான ரூபா 10,414,779 மொத்தமான சேமிப்புக்களிற்காக திருப்திகரமான காரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைத்த நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

---

பல்வேறு நடவடிக்கைகளிற்காக 18 அமைச்சுக்கள் மற்றும் 16 திணைக்களங்களிடமிருந்து வெவ்வேறு நடவடிக்கைகளிற்காக ரூபா 4,333,008,649 மொத்தமான ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 4,271,576,186 மொத்தமான தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, சேமிப்புக்கள் ரூபா 61,432,463 ஆக இருந்ததுடன் இது பெறப்பட்ட மொத்த ஏற்பாடுகளின் 1.42 சதவீமாக இருந்தது.

**(iv) வருமானக் கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 128(2)(இ) இன் பிரகாரம் நிலுவை வருமானக் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதிலிருந்து ரூபா 28,952,611 மொத்தமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில், மாவட்ட செயலகத்தால் ரூபா 5,945,219 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 23,007,392 நீண்டகாலமாக பொது வைப்புக் கணக்கில் இருந்தது.

**(v) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கணக்கினக்கம்**

---

பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லை

---

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 26401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 43,000,000 | 40,915,367 | 25,000,000 | 32,787,932 | 110,000,000 | 102,355,969 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு இணக்கக் கூற்றின் பிரகாரம், ரூபா 581,901 மொத்தமானவை மீதிகள் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகளின் அறவீடு மீதான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் இருந்தது.

(ii) மாவட்ட செயலகம் கடன் வழங்குதல் சம்பந்தமான பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமல் ரூபா 24,655,399 தொகையான இடர் கடன்கள் வழங்கப்பட்டிருந்தது.

(iii) இணக்கக் கூற்றில் திணைக்கள புத்தகத்திற்கும் பொதுத் திறைசேரியின் கணனி அச்சீட்டு தாளில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 47,464 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் 17 முதல் 19 ஆண்டுகள் வரையான காலமாக மேற்குறிப்பிட்ட வித்தியாசத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 1988 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 29/88 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 14:1 ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் அனுமதி இல்லாமல், ஐந்து உத்தியோகத்தர்களிற்கு ரூபா 2,749,920 கூட்டு மொத்தத் தொகையான இரண்டு ஆண்டு கடன்களை செலுத்தப்பட்டிருந்தன.

(v) பதவிநிலை உத்தியோகத்தரொருவருக்கு 1988 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 29/88 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 14:5 ஆம் பிரிவின் பிரகாரம் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் அனுமதி

பெற்றுக்கொள்ளாமல் ரூபா 751,680 தொகையான இரண்டு ஆண்டு கடன் செலுத்தப்பட்டிருந்தது.

(vi) திணைக்கள புத்தகத்திற்கும் திறைசேரி கணனி அச்சீட்டு தாள்களிற்கும் இடையில் ரூபா 38,782 தொகையான வித்தியாசங்கள் 1999 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 369 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

---

(i) நிதிப் பிரமாணம் 371 இன் ஏற்பாடுகளிற்கு முரணாக மூன்று சந்தர்ப்பங்களில் இரண்டு பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கு ரூபா 110,000 மொத்தமான உப கட்டுநிதிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 371 இன் ஏற்பாடுகளிற்கு முரணாக குறித்த நோக்கங்கள் முடிவடைந்த பின்னர் 01 முதல் 09 மாதங்கள் வரை ரூபா 983,971 மொத்தமான உப கட்டுநிதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம், ஒரு உத்தியோகத்தருக்கு ஒரே தடவையில் ரூபா 20,000 ஐ விஞ்சாத உபகட்டுநிதிகள் வழங்க முடியும். எவ்வாறாயினும், பிரமாணங்களிற்கு முரணாக ரூபா 1,513,126 தொகையான உப கட்டுநிதிகள் ரூபா 20,000 ஐ விஞ்சி 14 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்தன.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல ஆண்டுகளாக பொது வைப்புக் கணக்கில் விடப்பட்டிருக்கின்ற ரூபா 3,030,586 தொகையான பிணையாளி மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக்கணக்கில் இருக்கின்ற ரூபா 16,047 தொகையான பிடி காசு மீது நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பல்வேறு நோக்கங்களிற்காக வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து கிடைத்த ரூபா 10,441,618 தொகை குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்தாமல் 01 முதல் 33 மாதங்கள் வரையான காலமாக பொது வைப்புக்கணக்கில் இருந்தது.

(iv) திணைக்கள பேரேட்டிலுள்ள மீதிக்கும் பொது திறைசேரியின் கணனி அச்சீட்டுத் தாள்களில் காணப்படுகின்ற மீதிக்கும் இடையில் ரூபா 22,046,383 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டபோதிலும் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பொது வைப்புக் கணக்கிலிருந்து கட்டிட நிர்மாணம் மற்றும் புனரமைப்பு மற்றும் ஏனைய நிர்வாகச் செலவினம் என்பவற்றுக்காக ரூபா 20,499,908 ஆக தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த வைப்புக்களின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(vi) எட்டு பிரதேச செயலகங்களால் ரூபா 147,942 தொகையான காசு நன்கொடைகள் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 170(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது.

## 1.6 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க கடிதத்தின் பந்தி (ஈ) மற்றும் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந்திகதிய முறையே 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2014 செப்தெம்பர் 30 வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.3 வருடாந்த கொன்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது 2013 திசெம்பர் 31 வரை பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய டிஎம்ஏ/2009(I) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டம் குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மூன்று கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றிருந்தது.

**1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் அதன் பிரதேச செயலகங்களிற்கு ஒதுக்கப்பட்ட 46 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காரைநகர் பிரதேச செயலகத்தின் அலுவலக கட்டிடம் தனியார் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணியின் உரிமையாண்மை பிரதேச செயலகத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) காரைநகர் பிரதேச செயலகத்தின் அலுவலக கட்டிடம் மீளாய்வாண்டு திறக்கப்படுமென கூறப்பட்ட போதிலும் இந்த கட்டிடத்தின் பெறுமதி வரலாற்று கிரயத்திலோ அல்லது புத்தக பெறுமதியிலோ 2014 செப்தெம்பர் 30 வரை கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**1.8 இணக்கமின்மை**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (i) | திறைசேரி சுற்றறிக்கைகள் | ரூபா | |
| | (அ) 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்கம் | | நிலையான சொத்துப் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை |
| | (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கம் | | கணனிகள், கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள்களிற்கான பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அரச நிதிச் சுற்றறிக்கைகள் | | |
| | (அ) 2008 மே 28 ஆந் திகதிய 428 ஆம் இலக்கம் | 10,000 | ஒரு சந்தர்பபத்தில் சிறு செலவு கட்டுநிதி ரூபா 7,500 இற்கு மேலாக வழங்கப்பட்டிருந்தது. |
| | (ஆ) 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்கம் | 51,209 | மின்னியல் ஊடகங்கள், பங்கு கடன் வசதிகள் உள்ளக நேரடி தொடர்புகள் என்பவற்றிற்கான பயன்பாட்டிற்கான தொலைபேசி கட்டணங்கள் அறிவுறுத்தல்களிற்கு முரணாக மீளளிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| | (அ) நிதிப்பிரமாண இல. 69(2) | 16,800,000 | மீண்டெழும் செலவின விடயங்களிற்கு இடையில் மாற்றப்பட்ட நிதிகள் தொடர்பில் முன் அனுமதி பெறுவதற்கு தவறியமைக்காக திருப்திகரமான போதிய காரணம் கிடைத்திருக்கவில்லை. |
| | (ஆ) நிதிப்பிரமாண இல. 94 | 608,725 | பொறுப்புக்கள் ஒப்புவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| | (இ) நிதிப்பிரமாண இலக்கங்கள் 104(3), (4) | 230,567 | இரண்டு வாகனங்கள் விபத்துக்கள் அடைந்திருந்த போதிலும் விபத்துக் காரணமான நட்டங்கள் மற்றும் சேதங்கள் மீதான அறிக்கை |

| | | |
|---|---|---|
| | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிவ்லை. |
| (ஈ) நிதிப்பிரமாண இல. 110 | 4,522,321 | நட்டங்கள் மற்றும் சேதங்களிற்கான பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) நிதிப்பிரமாண இல. 396(ஈ) | 363,022 | ஆறு மாதற்களிற்கு மேல் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கம் | 7,787,459 | உத்தியோகபூர்வ வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு ஆறு மாதங்களிலும் பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை |
| 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்கம் | 2,889,264 | பதினைந்து பிரதேச செயலகங்களிற்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| | 75,554 | மீளாய்வாண்டின் போது மாவட்ட செலாளரின் ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு மேலதிகமாக ஒதுக்கப்பட்ட 632 லீற்றர் எரிபொருளிற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரிடமிருந்து தனிப்பட்ட அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| | 227,729 | மீளாய்வாண்டின் போது மாவட்ட செலாளரின் ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு பெறப்பட்ட 1,877 லீற்றர் மேலதிக எரிபொருளிற்காக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரிடமிருந்து தனிப்பட்ட அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 2013 ஒக்தோபர் 09 ஆந் திகதிய 13/2013 ஆம் இலக்கம் | 46,752 | மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலாளரால் 20 விடுமுறை நாட்களில் வேலை செய்தமைக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் முன்னனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (v) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சுற்றறிக்கை | | |
| | 2013 மார்ச் 28 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு சுற்றறிக்கை | 285,000 | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக விவசாய பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. |
| (vi) | கொள்வனவு வழிகாட்டல்கள் | | |
| | 5.4.11 ஆம் பிரிவு | 852,110 | அடுத்துவரும் மாதத்தின் 15 நாட்களிற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி என்போருக்கு பெறுமதி சேரி வரி விபரங்கள் அறிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| | 3.8 ஆம் பிரிவு | 144,000 | காரைநகர் பிரதேச செயலகத்தின் திறக்கப்பட்ட அலுவலக கட்டிட அறிவிப்புக்காக மூன்றுமொழிகளிலுள்ள நினைவுக் கல் நாட்டுவதற்காக கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்ட அமுலாக்கலிலுள்ள நலிவுகள்

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது வெளிப்பட்ட செயற்திட்டங்கள் தொடங்காமல் கைவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதம் என்பன கீழே தரப்படுகின்றன.

(அ) தொடங்காமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்படாமல் இருந்தது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | தொடங்க வேண்டிய திகதி | தொடங்கப்பட்டிராமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| பெண்கள் விடுதி - வடமராச்சி கிழக்கு பிரதேச செயலகம் | 10,000,000 | 2013 | விரைவாக முடிக்க வேண்டுமென தேவைப்பட்ட வேலைகளை தொடருவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த ஒதுக்கீடு வேலை தொடருவதற்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டன |
| சாரதிகளிற்கான இரண்டு விடுதிகள்- யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் | 3,000,000 | 2013 | -மேற்படி- |
| தென்மராச்சி பிரதேச செயலாளருக்கான விடுதி | 2,000,000 | 2013 | -மேற்படி- |
| வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளருக்கான விடுதி | 2,000,000 | 2013 | -மேற்படி- |
| வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளருக்கான விடுதி | 2,000,000 | 2013 | -மேற்படி- |
| காரைநகர் பிரதேச செயலாளருக்கான விடுதி | 2,000,000 | 2013 | -மேற்படி- |

(ஆ) செயற்திட்டத்தின் நிறைவேற்றலிலுள்ள தாமதங்கள்

மாவட்ட செயலகத்தின் நிர்வாக தொகுதி கட்டிடத்தின் கட்டம் III இன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 11.7 மில்லியனாக இருற்ததுடன் 2013 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்த கட்டம் IV இற்கான கிரயம் ரூபா 4.9 மில்லியாக இருந்த போதிலும் கட்டம் III இன் பௌதீக முன்னேற்றம்

75 சதவீதமாகவும் நிதி முன்னேற்றம் 60 சதவீதமாகவும் மாத்திரமே இருந்ததுடன் கட்டம் IV இன் பௌதீக முன்னேற்றம் 35 சதவீதம் எனவும் 2014 யூலை மாதமளவில் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**1.10 வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்**

(அ) சீராக்கலிற்கான மீதிகள்

மாவட்ட செயலகத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஆறு மாதங்களிற்கு மேல் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 363,022 பெறுமதியான காசோலை காட்டப்பட்டிருந்தது.

**1.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டலில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையிலிருந்து விலகல்

(i) வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் புதுப்பித்தல் வேலைகள் கொள்வனவு வழிகாட்டலின் 3.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவு நடைமுறையை பின்பற்றாமல் ரூபா 800,000 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பரீட்சிப்பின் போது, 11 விடயங்களின் அளவீடு அளவீட்டு பட்டியலில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன்விளைவாக, ரூபா 207,718 தொகை ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட இரண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்கான சிற்றூண்டி விடயங்கள் கொள்வனவிற்காக 2013 ஒக்தோபர் 30 இல் திணைக்கள கொள்வனவு குழு தீர்மானத்திற்கு முரணாக வழங்குநர் ஒருவருக்கு ரூபா 46,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிவில் பொறியியலாளரொருவர் மாவட்ட செயலகத்தின் சேவையில் இருந்த போதிலும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறாமல் மாநாட்டு மண்டபம் மீள்நிர்மாணிப்பு மேற்பார்வைக்காக 2013 யூன் 10 இல் திணைக்கள கொள்வனவு குழுவின் சிபார்சுகளில் ஒப்பந்த அடிப்படையில்

ஈடுபடுத்தப்பட்டிருந்த ஆலோசனை பொறியியலார் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் என்போருக்கு பொது வைப்புக் கணக்கிலிருந்து ரூபா 180,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் எல்லைக்குழுவின் தலைவருக்கு உள்ளூராட்சி மற்றும் மகாகாணசபைகள் அமைச்சு செயலாளரின் 2013 பெப்ரவரி 27 ஆந் திகதிய பிஎல்/7/5/8/1 ஆம் இலக்க கடிதத்திற்கு முரணாக ரூபா 7,097 படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஏனையவை

--------------------

(i) பாதீட்டில் நிதி ஏற்பாடுகள் இல்லாமல் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்காக நெஸ் ரீ மற்றும் நெஸ்ரீ கப் என்பவற்றின் கொள்வனவிற்காக ரூபா 28,240 தொகை ஏற்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலாளரின் வதிவிடத்திற்காக “எரிவாயு” கொள்வனவு செய்வதற்கு ரூபா 40,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 2013 நவம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிற்காக ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 700 வீதத்தில் ஆறு மணியத்தியாலத்திற்காக ஐந்து வள நபர்களிற்கு ரூபா 4,200 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 1.12. மோசடித்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பகுதியில் மூன்று நிலையங்களின் சிறுவர் அபிவிருத்திக்காக 2012 ஒக்தோபர் 30 இல் சிறுவர் செயலக பணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 200,000 தொகை அந்த நிலையங்களிற்கு எந்தவொரு விடயங்களையும் வழங்காமல் மோசடியாக பெறப்பட்டிருந்தது.

## 1.13. நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்ட அலுவலகத்தின் மாற்றம் காரணமாக ரூபா 4,522,321 தொகையான ஏற்பட்ட நட்டங்களின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1998 இலிருந்து 284 விடயங்களின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 1.14. முகாமைத்துவ நலிவுகள்

தனியார் பயணிகள் கப்பல் சேவைகளின் வேலைகளிற்காக ஊக்குவிப்பு கொடுப்பனவிற்காக அனுமதிக்கப்பட்ட திட்டம் இல்லாமல் மாவட்ட செயலாளர் உள்ளடங்கலாக 24 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 3.425 மில்லியன் தொகையான ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்தது. பயணிகள் சேவை 2009 மார்ச் மாதத்தில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வேலைகள் தொடர்பான கொடுப்பனவுகள் சம்பளங்களிற்கு மேலதிகமாக, மேலதிகநேர கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகளாக ஒரு நாளிற்கு ரூபா 500 வீதத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 சனவரி 23 இல் பொதுக் கணக்குகள் குழுவால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களின் பிரகாரம், ரூபா 3.325 மில்லியன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.15. மனிதவளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 42 | 44 | - | 02 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 21 | 19 | 02 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 755 | 691 | 64 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 195 | 185 | 10 | - |
| | மொத்தம் | 1,013 | 939 | 76 | 02 |

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் நிலவும் 76 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.